சின்னமனூர் நகராட்சி
சின்னமனூர்.
நாள்:– 16.10.2019

# சாதாரணக் கூட்டம்

திருவள்ளுவர் ஆண்டு, விகாரி வருடம் ஆவணி மாதம் 13–ம் நாள் (அக்டோபர் திங்கள் 16–ம் நாள்:– 16.10.2019) புதன் கிழமையன்று பிற்பகல் 05.00 மணியளவில் சின்னமனூர் நகராட்சி தனி அதிகாரி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விபரம்.

தனி அதிகாரி மற்றும் ஆணையாளர்
சின்னமனூர் நகராட்சி.

**பொருள் எண்.01**

இந்நகராட்சிக்குச் சொந்தமான நேருஜி பேருந்து நிலையத்தில் புதியதாக கட்டப்பட்டுள்ள பேருந்து நிலைய கடைகள், உணவகம் மற்றும் கட்டணக் கழிப்பறைகளை நகர்மன்றத் தீர்மான எண்.665, நாள்.18.07.2016 ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டு காலத்திற்கு நிபந்தனைகளுக்குட்பட்டு ஒப்படைக்க முன் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன்படி 3 கடைகளை 19.09.2019 ஆம் தேதி மறு பொது ஏலத்துடன் கூடிய ஒப்பந்தப்புள்ளி கோரியதில், 2 கடைக்கு மட்டுமே வைப்புத் தொகை செலுத்தி ஒப்பந்தப்புள்ளி கொடுக்க முன்வந்துள்ளனர். இதர இனஙகளுக்கு எவரும் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர முன்வரவில்லை. வரப்பெற்ற கீழ்கண்ட விவரப்படியான ஒப்பந்தப்புள்ளி விவரம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | கடை எண். | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி மாத வாடகை (தொகை) |
|---|---|---|---|
| 1. | 26 | த.சிவா, த/பெ.வி.தர்மராஜ், அண்ணா 2வது தெரு, பழனிச்செட்டிபட்டி | ரூ.2300/– |
| 2. | 28 | ச.வினோத் குமார், த/பெ.சந்திரன் வார்டு 2/49, நடுத்தெரு, மேலப்பூலானந்தபுரம், சீலையம்பட்டி | ரூ.2300/– |

அலுவலகக் குறிப்பு:– **கடை எண்.26 மற்றும் 28க்கு 14 முறை பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியதில் ஒருவரும் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கலந்து கொள்ள முன்வராத நிலையில் தற்போது ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் கடை எண்.26க்கு திரு.த.சிவா த/பெ.வி.தர்மராஜ் மற்றும் கடை எண்.28க்கு திரு.ச.வினோத் குமார் த/பெ.சந்திரன் உயர்ந்த பட்ச மாத வாடகை ரூ.2300/– கோரியுள்ளதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.370/2017/அ2)**

தீர்மான எண், நாள் **714, நாள்.16.10.2019**

தீர்மானம் **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.02**

இந்நகராட்சியின் அலுவலக பயன்பாட்டில் இயங்கி வரும் ஈப்பு வாகனம் எண்.TN60S6634க்கு ஒரு வருட காலத்திற்கு 16.10.2019 முதல் 15.10.2020 வரை காப்பீடு புதுப்பிப்பு செய்வதற்கும், உத்தேச தொகை ரூ.16407/–ஐ யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனத்திற்கு வழஙக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:– **1. மன்றம் அனுமதிக்கலாம்.**
**2. மேற்காணும் செலவினத்தை வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்வதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.7057/2014/இ2)**

தீர்மான எண், நாள் **715, நாள்.16.10.2019**

தீர்மானம் **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

பொருள் எண்.03

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்கள், துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள், பொறியியல் பிரிவில் பணிபுரியும் பணியாளர்கள், RCH துப்புரவு பணியாளர்கள், அலுவலக உதவியாளர்கள் மற்றும் இரவு காவலர் ஆகியோருக்கு 2019–2020 ஆம் ஆண்டிற்கான இரண்டு ஜோடி சீருடைகள் மற்றும் அதற்கான தையல் கூலி வழஙகிடவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.250000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:– **1. மன்றம் அனுமதிக்கலாம்.**
**2. மேற்காணும் செலவினத்தை வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்வதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.5514/2010/எச்1)**

தீர்மான எண், நாள் **716, நாள்.16.10.2019**

தீர்மானம் **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

பொருள் எண்.04

இந்நகராட்சியின் பயன்பாட்டிலுள்ள ஈப்பு வாகனம் எண்.TN60S3761க்கு (குடிநீர் லாரி) சில மராமத்து பணிகள் மேற்கொள்ள 18.09.2019ம் தேதிய வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விவரம் | தொகை |
|---|---|---|
| 1. | சிவகாமி ஆட்டோ ஒர்க்ஸ், சின்னமனூர் | ரூ.56950/– |
| 2. | நேஷனல் பாடி பில்டிங லேபர் ஒர்க்ஸ், சின்னமனூர் | ரூ.58150/– |

அலுவலகக் குறிப்பு:– **1. குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள சிவகாமி ஆட்டோ ஒர்க்ஸ், சின்னமனூர் நிறுவனத்திற்கு ஈப்பு வாகனம் (குடிநீர் லாரி) மராமத்து பணிகள் மேற்கொள்ள முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழஙகியதை மன்றம் ஏற்கலாம்.**
**2. மேற்காணும் பட்டியல் தொகையினை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து வழஙகலாம். (ந.க.எண்.0324/2014/இ2)**

தீர்மான எண், நாள் **717, நாள்.16.10.2019**

தீர்மானம் **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.05**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு மூலம் டெங்கு நோய் தடுப்பு நடவடிக்கைக்காக கொசுக்களை ஒழிக்க புகை மருந்து அடிக்கும் இயந்திரம் (Fogging Machine) கொண்டு அடிக்க தேவையான மருந்து பைரத்ரீம் நகராட்சியில் போதிய அளவு இருப்பு இல்லாததால் வருஙகால தேவைக்காக 100 லிட்டரை தமிழ்நாடு அரசு மருத்துவ சேவை மையம் (TNMS) அஙகீகாரம் பெற்ற நிறுவனத்தில் வாஙக ஆகும் உத்தேச செலவினம் ரூ.150000/—க்கு மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு:— | **1. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**2. மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி தனி அதிகாரி மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று அஙகீகாரம் பெற்ற நிறுவனத்திடம் விலைப்புள்ளி பெற்று மருந்து வாஙகுவதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.3635/2019/எச்1)** |
| **தீர்மான எண், நாள்** | **718, நாள்.16.10.2019** |
| **தீர்மானம்** | **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

*******

**பொருள் எண்.06**

பொது சுகாதாரப் பிரிவில் டெஙகு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கையாக கொசு ஒழிப்பு பணிக்கு பயன்படுத்தப்படும் புகையடிப்பான் (Fogging Machine) அனைத்தும் 2012—2013 ஆம் ஆண்டுகளில் வாஙகப்பட்டது. அதனால் மேற்கண்ட இயந்திரத்தை பயன்படுத்த முடியாமல் பழுதடைந்துள்ளது தற்போதைய சூழலில் டெஙகு காய்ச்சல் பரவாமல் தடுக்க தொடர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் அறிவுறுத்தியதை தொடர்ந்தும் கீழ்கண்ட விவரப்படியான புகையடிப்பான் (Fogging Machine) வாஙக ஆகும் உத்தேச செலவினம் ரூ.900000/—க்கு மன்ற அனுமதி வேண்டி வைக்கப்படுகிறது.

1. Vehicle Mounted Fogging Machine – 1 No
2. Pols Fogging machine – 2 Nos
3. Hand Fogging Machine – 6 Nos

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு:— | **1. மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**2. மேற்காணும் செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்வதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.3693/2019/எச்1)** |
| **தீர்மான எண், நாள்** | **719, நாள்.16.10.2019** |
| **தீர்மானம்** | **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

*******

**பொருள் எண்.07**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு மூலம் டெங்கு நோய் தடுப்பு நடவடிக்கையாக கொசுக்களை ஒழிக்க தேவைப்படும் அபேட் மருந்து (Temlphoss 50 V.EC) நகராட்சியில் போதிய இருப்பில் இல்லாததால் 100 லிட்டர் அபேட் மருந்து தமிழ்நாடு அரசு மருத்துவ சேவை மையம் (TNMS) அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தின் மூலம் வாஙக ஆகும் உத்தேச செலவினம் ரூ.100000/—க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:—**

1. **மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம்.**
2. **பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடம் விலைப்புள்ளி பெற்று மருந்து வாங்குவதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.3634/2019/எச்1)**

**தீர்மான எண், நாள்** **720, நாள்.16.10.2019**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.08**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் TN60S9443 என்ற காம்பாக்டர் வாகனத்திற்கு 2019—2020 ஆம் ஆண்டிற்கான இன்சூரன்ஸ் பிரிமியத் தொகை ரூ.34956/— தேனி யுனைடேட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் நிறுவனத்திற்கு செலுத்த பட்டியல் வரப்பெற்றுள்ளதை தொடர்ந்து மேற்படி தொகையினை செலுத்தி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:—**

1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம். (ந.க.எண்.0308/2018/எச்1).**

**தீர்மான எண், நாள்** **721, நாள்.16.10.2019**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.09**

இந்நகராட்சியின் குடிநீர் விநியோகப் பணியில் போதிய பணியாளர்கள் இல்லாததால் Head Works, Filter Bed, Tank Operator மற்றும் குழாய்களில் ஏற்படும் அடைப்புகளை சரி செய்ய போன்ற பணிகளை கவனிக்க ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை நியமித்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நவம்பர் 2019 முதல் பணிகள் மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு தொகை ரூ.9.90 இலட்சத்திற்கு 14.10.2019ம் தேதியன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை கீழ்க்கண்ட விவரப்படி மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. திரு.ஆர்.பரமானந்தன், ஒப்பந்ததாரர் – 0.019% மதிப்பீட்டைவிட குறைவு
2. திரு.கே.வனராஜ், ஒப்பந்ததாரர் – 1.32% மதிப்பீட்டை விட அதிகம்.

**அலுவலகக் குறிப்பு:–**

1. **குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள (0.019%) திரு.ஆர்.பரமானந்தன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.**
2. **குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி வேலை உத்திரவு வழங்கியுள்ளதை மன்றம் ஏற்கலாம. (ந.க.எண்.1450/2012/இ2).**

**தீர்மான எண், நாள்** **722, நாள்.16.10.2019**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.10**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பொது கழிப்பிடங்களில் மாற்று திறனாளிகளுக்கான சாய்வு தளம், Hand Rail மற்றும் European Water Closet –24 எண்ணம் அமைக்கும் பணி ரூ.4.70 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 08.08.2019ம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

1. திரு.எஸ்.சந்திரன், ஒப்பந்ததாரர் – 0.30% மதிப்பீட்டைவிட குறைவு
2. திரு.கே.முனிசாமி, ஒப்பந்ததாரர் – 0.45% மதிப்பீட்டைவிட அதிகம்

**அலுவலகக் குறிப்பு:–** குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள (0.30%) திரு.எஸ்.சந்திரன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.3017/2019/இ1).

**தீர்மான எண், நாள்** 723, நாள்.16.10.2019

**தீர்மானம்** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.11**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.13, விநாயகர் கோவில் தெருவில் IHHL திட்டத்தின் கீழ் தனி நபர் கழிப்பிடம் கட்டிய 41 நபர்களுக்கு பாதாள சாக்கடை திட்டம் மெயின் பைப் மற்றும் Manhole கட்டும் பணிக்கு மதிப்பீடு ரூ.1.34 இலட்சத்திற்கு 14.10.2019ம் தேதியன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. திரு.கே.வனராஜ், ஒப்பந்தக்காரர் – 0.40% சதவீதம் மதிப்பீட்டைவிட அதிகம்
2. திரு.ஆர்.பரமானந்தன், ஒப்பந்தக்காரர் –0.25% சதவீதம் மதிப்பீட்டைவிட குறைவு.

**அலுவலகக் குறிப்பு:–** குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள (0.25%) திரு.ஆர்.பரமானந்தன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.4229/2002/இ1)

**தீர்மான எண், நாள்** 724, நாள்.16.10.2019

**தீர்மானம்** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.12**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்ற திட்டப் பணிகளை மாலைமலர் தினசரி நாளிதழில் 30.08.2019ம் அன்று பிரசுரம் செய்தமைக்கு தொகை ரூ.9576/– மலர் பப்ளிகேசன்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு வழங்க மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.0248/2019/இ1).

**தீர்மான எண், நாள்** 725, நாள்.16.10.2019

**தீர்மானம்** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.13**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் **2017–2018** முதல் **2018–2019**ம் வரை நடைபெற்ற திட்டப் பணிகளை தினத்தந்தி திண்டுக்கல் தொழில் மலர் **2019**இல் பிரசுரம் செய்தமைக்கு தொகை ரூ.24255/– The Daily Thanthi அவர்களுக்கு வழங்க மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.0248/2019/இ1).**
**தீர்மான எண், நாள்** **726, நாள்.16.10.2019**
**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******